

ஆட்டிசம் குழந்தைகளுக்கு வந்தாச்சு நம்பிக்கைத் தரும் டெக்னாலஜி!

ஒரு குழந்தை தன்னால் விரும்பிய இடத்துக்குச் செல்ல முடியாமல் தவிப்பது, கூட்டத்தைப் பார்த்துப் பயப்படுவது, புதிய சூழலை எதிர்கொள்ள முடியாமல் அழுவது போன்றவை மற்றவர்களுக்கு சாதாரணமாகத் தோன்றலாம்.

ஆனால், ஆட்டிசம் உள்ளிட்ட நரம்பியல் வளர்ச்சிக் குறைபாடுகள் கொண்ட குழந்தைகளுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் இவை மிகப்பெரிய சவால்கள்.

ஒரு திரைப்படம் பார்ப்பது, உணவகத்துக்குச் சென்று உணவு ஆர்டர் செய்வது, விமானத்தில் பயணம் செய்வது போன்ற செயல்கள் அவர்களுக்குப் பெரும் போராட்டமாக இருக்கலாம்.

இத்தகைய சவால்களைக் கடந்து அவர்கள் தன்னம்பிக்கையுடன் சமூகத்தில் இயங்குவதற்கான வாய்ப்பை உருவாக்கும் முயற்சியாக உருவாகியதுதான் 'ஜாது' (Jadhu) என்ற புதிய தொழில்நுட்பத் தளம். இது குறித்து ரீவின் ஹெல்த் நிறுவனத்தின் இயக்குநர் விஜய் நம்முடன் பகிர்ந்து கொண்டவை ஒவ்வொரு பெற்றோரும் அறிய வேண்டிய விஷயங்கள்.

ஜாது என்றால் என்ன?

ஜாது என்ற பெயருக்கு இந்தியில் மேஜிக் என்று பொருள். சிறப்புத் தேவைகள் கொண்ட குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் மாற்றத்தையும் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்திலேயே இந்தப் பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

நரம்பியல் பாதிப்புகள் கொண்டவர்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கையை முடிந்தவரை சுதந்திரமாகவும் பிறரைச் சார்ந்திருக்காமலும் வாழ்வதற்குத் தேவையான அடிப்படைத் திறன்களை வளர்ப்பதே இதன் முக்கிய நோக்கம்.

இந்த ஜாது உருவாக்கம் என்பது, எனது குடும்ப அனுபவத்திலிருந்தே தொடங்கியது. அதாவது, எனது தாயாருக்கு ஏற்பட்ட பக்கவாதப் பாதிப்பு மற்றும் அவரது இழப்பே, நரம்பியல் மறுவாழ்வுச் சிகிச்சையின் அவசியத்தை எனக்கு உணர்த்தியது.

மருத்துவமனைச் சிகிச்சையைத் தாண்டி, நோயாளிகள் வீட்டிலேயே தங்களுடைய செயல்பாட்டுத் திறனையும் சுதந்திரத்தையும் மீட்டெடுக்க உதவும் வகையில் 'ரீவின் ஹெல்த்' (Rewin Health) என்ற முயற்சியைத் தொடங்கினேன்.

இதன்மூலம் பக்கவாதம், டிமென்ஷியா, பார்கின்சன் போன்ற பாதிப்பு கொண்டவர்களுக்கு மறுவாழ்வுப் பயிற்சிகளை வழங்கும் முயற்சி ஆகும் இது.

அதன் தொடர்ச்சியாக, ஆட்டிசம் உள்ளிட்ட நரம்பியல் வளர்ச்சிக் குறைபாடுகள் கொண்டவர்களின் அன்றாட வாழ்க்கைச் சவால்களைக் கையாள உதவும் வகையில் ஜாது உருவாக்கப்பட்டுள்ளது.

சிகிச்சையைத் தாண்டி வாழ்க்கைக்கான பயிற்சி

ஆட்டிசம் கொண்ட ஒவ்வொரு குழந்தையும் வெவ்வேறான திறன்களையும் சவால்களையும் கொண்டிருப்பார்கள். சிலருக்குத் தொடர்பு கொள்வதில் சிரமம் இருக்கலாம். சிலருக்குக் கூட்டம், அதிக வெளிச்சம், சத்தம் போன்றவற்றைத் தாங்கிக் கொள்வதில் சிக்கல் இருக்கலாம்.

இன்னும் சிலருக்குச் சமூகத்தில் மற்றவர்களுடன் பழகுவது, புதிய இடங்களுக்குச் செல்வது, அன்றாடச் செயல்களைத் தனியாகச் செய்வது போன்றவற்றில் சிரமம் ஏற்படலாம்.



விஜய்



வழக்கமான சிகிச்சை மையங்களில் தகவல் தொடர்புத் திறன், உணர்வுகளைச் சீரமைத்தல், கவனம் செலுத்துதல், உடல் இயக்கத் திறன், சமூகத் தொடர்பு, அன்றாட வாழ்க்கைக்கான அடிப்படைச் செயல்பாடுகள் போன்றவற்றுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

உதாரணமாக, ஐந்து ரூபாய், பத்து ரூபாய் நோட்டுகளை அடையாளம் காண்பது, பணத்தின் மதிப்பைப் புரிந்துகொள்வது போன்றவற்றை ஒரு குழந்தை வீட்டில் எளிதாகச் செய்யலாம்.

ஆனால், அதே குழந்தையைப் புதிய உணவகத்துக்கு அழைத்துச் செல்லும்போது அங்குள்ள வெளிச்சம், சத்தம், மக்கள் கூட்டம் போன்றவற்றால் பதற்றமடைந்து தனக்குத் தெரிந்த விஷயங்களைக் கூடச் செய்ய முடியாமல் போகலாம்.

இதற்குக் காரணம், அந்தச் சூழலை எதிர்கொள்வதில் ஏற்படும் பதற்றமும் உணர்வுசார் சவால்களும்தான். எனவே, ஒரு திறனைக் கற்றுக் கொடுப்பதோடு நிறுத்திவிடாமல், அந்தத் திறனை நிஜ வாழ்க்கையில் எப்படிப் பயன்படுத்துவது என்பதையும் கற்றுக்கொடுக்க வேண்டியது அவசியம்.

விர்ச்சுவல் ரியாலிட்டி மூலம் புதிய அனுபவம்!

இந்த இடத்தில்தான் ஜாது தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிக்கிறது. விர்ச்சுவல் ரியாலிட்டி (Virtual Reality) எனப்படும் மெய்நிகர் அனுபவத் தொழில்நுட்பத்தின் மூலம், குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு அன்றாட வாழ்க்கையில் எதிர்கொள்ள வேண்டிய சூழல்களை முன்கூட்டியே அறிமுகப்படுத்திப் பயிற்சி அளிக்கப்படுகிறது.





விமானத்தில் பயணம் செய்வதற்கு முன்பு விமானிகள் சிமுலேட்டர் மூலம் பல்வேறு சூழல்களை எதிர்கொண்டு பயிற்சி பெறுவார்கள். அதேபோன்ற அணுகுமுறையை நரம்பியல் வளர்ச்சிக் குறைபாடுகள் கொண்டவர்களுக்கும் பயன்படுத்துவதே இந்த முயற்சியின் அடிப்படை.

உதாரணமாக, விமான நிலையத்துக்குச் செல்வது, பாதுகாப்புச் சோதனையை எதிர்கொள்வது, போர்டிங் பாஸைக் காண்பிப்பது, விமானத்தில் ஏறுவது போன்ற ஒவ்வொரு செயல்பாடும் மெய்நிகர் சூழலில் உருவாக்கப்படுகிறது.

அதேபோல், கோயிலுக்குச் செல்வது, திரையரங்கில் திரைப்படம் பார்ப்பது, உணவகத்தில் உணவு ஆர்டர் செய்வது போன்ற அனுபவங்களையும் உருவகப்படுத்த முடியும்.

இந்தப் பயிற்சியில் வெளிச்சம், ஒலி, மக்கள் நடமாட்டம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இடம்பெறும். ஒவ்வொரு குழந்தைக்கும் எந்த மாதிரியான வெளிச்சம் அல்லது சத்தம் பதற்றத்தை ஏற்படுத்துகிறது என்பதைக் கண்டறிய சென்சார் தொழில்நுட்பமும் பயன்படுத்தப்படுகிறது. இதன் அடிப்படையில் அவர்களுக்குத் தேவையான சூழலுக்கு ஏற்ப பயிற்சியை மாற்றியமைக்க முடியும்.

முக்கியமாக, நிஜ வாழ்க்கையில் திடீரென எதிர்கொள்ள வேண்டிய சூழலைப் போல அல்லாமல், மெய்நிகர் சூழலில் ஒவ்வொரு அம்சத்தையும் கட்டுப்படுத்தி, குழந்தையின் திறனுக்கு ஏற்ப படிப்படியாகப் பயிற்சி அளிக்க முடியும். இதன்மூலம் புதிய சூழல்களைப் பற்றிய பயம் மற்றும் பதற்றத்தைக் குறைத்து, தன்னம்பிக்கையை வளர்க்க உதவுகிறது.

17 ஆண்டுகளுக்குப் பிறகு திரையரங்கில் திரைப்படம்!

இந்தத் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை விளக்கும்போது, ஒரு பெற்றோரின் அனுபவத்தை நிறுவனத் தரப்பினர் பகிர்ந்து கொள்கின்றனர்.

ஆட்டிசம் பாதிப்புடைய தனது மகனை 17 ஆண்டுகளாகத் திரையரங்குக்கு அழைத்துச் செல்ல முடியாமல் ஒரு தாய் தவித்துள்ளார். திரையரங்கின் அதிகப்படியான சத்தம், வெளிச்சம், மக்கள் கூட்டம் போன்றவை மகனுக்குப் பதற்றத்தை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சமே இதற்குக் காரணம்.

ஜாது தளத்தின் மூலம் படிப்படியாகப் பயிற்சி அளிக்கப்பட்ட பிறகு, அந்த இளைஞரால் முதன்முறையாகத் திரையரங்குக்குச் சென்று திரைப்படம் பார்க்க முடிந்துள்ளது. இடைவேளையில் தாயுடன் சென்று பாப்கார்ன் வாங்குவது, கழிப்பறைக்குச் சென்று திரும்புவது எனத் தனக்குத் தேவையான செயல்களைச் செய்துள்ளார்.

மற்றவர்களுக்கு இவை மிகவும் சாதாரணமான நிகழ்வுகளாக இருக்கலாம். ஆனால், பல ஆண்டுகளாக மகனைத் திரையரங்குக்கு அழைத்துச் செல்ல முடியாமல் தவித்த ஒரு தாய்க்கு இது மிகப்பெரிய மகிழ்ச்சியான அனுபவமாக அமைந்துள்ளது.

இதுபோன்ற சிறியதாகத் தோன்றும் முன்னேற்றங்கள்தான் சிறப்புத் தேவைகள் கொண்டவர்களின் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

ஒவ்வொருவருக்கும் தனித்தனிப் பயிற்சி

ஆட்டிசம் மட்டுமின்றி, டிஸ்லெக்ஸியா உள்ளிட்ட கற்றல் குறைபாடுகள் கொண்டவர்களுக்கும் அவர்களின் தேவைக்கேற்பப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

முதலில் ஒவ்வொருவரின் திறன்கள், குறைபாடுகள், எதிர்கொள்ளும் சவால்கள் ஆகியவை மதிப்பீடு செய்யப்படுகின்றன. அதன் அடிப்படையில் அவர்களுக்குத் தேவையான பயிற்சித் தொகுப்புகள் உருவாக்கப்படுகின்றன.

உதாரணமாக, டிஸ்லெக்ஸியா கொண்ட சில குழந்தைகளுக்கு எழுத்துகள் மற்றும் வார்த்தைகளை அடையாளம் காண்பதில் சிரமம் இருக்கலாம். எழுத்துகள் மாறி மாறித் தெரிவது அல்லது வார்த்தைகளைப் புரிந்து கொள்வதில் சிக்கல் ஏற்படுவது போன்ற பிரச்னைகளை எதிர்கொள்ளலாம்.

இத்தகைய குழந்தைகளுக்கு அவர்களுடைய புரிதலுக்கு ஏற்ற வகையில் காட்சிகள், ஒலிகள் மற்றும் குறியீடுகள் மூலம் கற்றுக் கொடுக்க முடியும்.

அதேபோல், ஆட்டிசம் கொண்டவர்களிலும் ஒவ்வொருவரின் திறன் மற்றும் பாதிப்பின் அளவு மாறுபடும். எனவே, அனைவருக்கும் ஒரே மாதிரியான பயிற்சியை வழங்காமல், அவர்களுடைய தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப பயிற்சிகள் வடிவமைக்கப்படுகின்றன.

வீட்டிலிருந்தே பயிற்சி பெறும் வசதி

சிறப்புத் தேவைகள் கொண்ட குழந்தைகளில் பலர் முறையான சிகிச்சை மையங்களுக்கோ சிறப்புப் பள்ளிகளுக்கோ செல்வதற்கான வாய்ப்பைப் பெறுவதில்லை.

குறிப்பாக, நகரங்களுக்கு வெளியே வசிக்கும் குடும்பங்களுக்கு இத்தகைய பயிற்சிகளைப் பெறுவதில் பல சிரமங்கள் இருக்கின்றன.

இதை கருத்தில்கொண்டு, பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், கிளினிக்குகள் மற்றும் தன்னார்வ அமைப்புகள் மூலமாகவும், வீட்டிலிருந்தே மொபைல் செயலி வாயிலாகவும் பயிற்சி பெறும் வசதியை ஏற்படுத்துவதே எங்களின் நோக்கம்.

இதனால், பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்கள் மொபைல் போன் மூலம் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்க முடியும். பயிற்சியின்போது எழும் சந்தேகங்களுக்குத் தீர்வு காண ஆலோசனை வழங்கும் வசதியும் உள்ளது. இதன்மூலம் பெற்றோர் வீட்டிலிருந்தபடியே குழந்தைகளின் திறன்களை மேம்படுத்துவதற்கான வழிகாட்டுதலைப் பெறலாம்.



பெற்றோரின் கவலைக்குத் தீர்வு காணும் முயற்சி

சிறப்புத் தேவைகள் கொண்ட குழந்தைகளின் பெற்றோர்களுக்கு இருக்கும் மிகப்பெரிய கவலை, தங்களுக்குப் பிறகு குழந்தைகளின் எதிர்காலம் என்னவாகும் என்பதுதான்.

தாங்கள் இருக்கும்வரை குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள முடியும். ஆனால், எதிர்காலத்தில் அவர்கள் தங்களுடைய தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்துகொண்டு சுதந்திரமாக வாழ முடியுமா என்ற கேள்வி பல பெற்றோர்களைத் தொடர்ந்து வாட்டுகிறது.

எனவே, குழந்தைகளுக்கு அடிப்படைப் பயிற்சிகளை மட்டும் வழங்காமல், அவர்களுடைய வயதுக்கு ஏற்ற சமூகச் சூழல்களையும் வாழ்க்கைத் திறன்களையும் கற்றுக்கொடுக்க வேண்டியது அவசியம். பள்ளிப் பருவத்தில் கற்றுக்கொண்ட திறன்கள் கல்லூரிக்குச் செல்லும்போது போதுமானதாக இல்லாமல் போகலாம். அதேபோல், கல்லூரிப் படிப்பை முடித்த ஒருவர் பணியிடத்தில் மற்றவர்களுடன் பழகுவது, புதிய சூழல்களை எதிர்கொள்வது போன்றவற்றில் சிரமங்களைச் சந்திக்கலாம். எனவே, வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களுக்குத் தேவையான திறன்களை வளர்த்துக்கொள்வதற்கான பயிற்சி அவசியமாகிறது.

குறைந்த செலவில் தொழில்நுட்பப் பயிற்சி

வழக்கமான சிகிச்சை மையங்களில் பயிற்சி பெறுவதற்கு மாதந்தோறும் அதிக செலவாகலாம். இதற்கு மாற்றாக, இந்த தொழில்நுட்பத்தின் உதவியுடன் ரூ.699 என்ற குறைந்தபட்ச கட்டணத்தில் ஆறு மாதங்கள் பயிற்சிகளை பெற முடியும் என்கிறார் ரீவின் ஹெல்த் நிறுவனத்தின் இயக்குநர் விஜய்.

- ஸ்ரீதேவி குமரேசன்